**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 337 நாள்: 28.07.2026

**மாதவரம் மற்றும் மணலி மண்டலங்களில்மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.**

இன்று (28.07.2026) வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் மண்டலம், வார்டு-25க்குட்பட்ட மாதவரம் ரவுண்டானா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்து தீவுத்திட்டுப் பூங்கா, செக்ரட்டரியேட் ஆபீசர்ஸ் காலனியில் உள்ள குப்பைகளை தரம் பிரிக்கும் மையம், மாசிலாமணி நகரில் உள்ள நுண் உரமாக்கல் மையம், வார்டு-28க்குட்பட்ட ஜி.என்.டி. சாலையில் உள்ள காசா கிராண்ட் அடுக்குமாடி குடியிருப்புப் பகுதியில் பெருமளவு கழிவு உற்பத்தி குறித்தும், முத்துமாரியம்மன் கோவில் தெருவில் உள்ள அம்மா உணவகம், வார்டு-27க்குட்பட்ட பால் பண்ணை காலனியில் உள்ள ஆவின் குளம், சாஸ்திரி நகர் மயானபூமி, சின்னசேக்காடுப் பகுதியில் உள்ள உயிரி எரிவாயு ஆலை, மணலி மண்டலம், வார்டு-22க்குட்பட்ட காமராஜர் சாலையில் உள்ள திறந்த வெளி இடத்தில் பூங்கா அமைப்பது குறித்துப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், அம்மா உணவகத்தில் வழங்கப்படும் உணவின் தரம், உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் சமையலறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும், போக்குவரத்து தீவுத்திட்டு பூங்கா மற்றும் ஆவின் குளத்தினைத் தூய்மையாகப் பராமரித்திடவும், குப்பைகளை தரம் பிரிப்பது, நுண் உரமாக்கல் பணிகளை பாதுகாப்பான முறையில் மேற்கொள்வது குறித்தும், அடுக்குமாடி குடியிருப்புப் பகுதியில் தூய்மைப் பணி மற்றும் பெருமளவு கழிவு உற்பத்திகளை அன்றாடம் அகற்றிடுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**